
# அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின்

# வாழ்க்கைக் குறிப்பும் வரலாற்றுக் குறிப்புக்களும்




1927.08.26 ~ 1989.07.13

வெளியீடு — 1


அமிர்தலிங்கம் நினைவுப் பணிக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் நடைபெற்ற
# அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின்
# ஞாபகார்த்த சொற்பொழிவுக் கூட்டம்




பேராசிரியர் சர்வபள்ளி கோபால், ரொனி டி மெல், இரா. சம்பந்தன் ஆகியோர் அமர்ந்திருக்க சிவசிதம்பரம் உரை நிகழ்த்துகிறார்.



இந்து பத்திரிகை ஆசிரியர் ராம், ரி. சுபசிங்க ஆகியோர் அமர்ந்திருக்க சிவசிதம்பரம் உரை நிகழ்த்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பும் வரலாற்றுக் குறிப்புக்களும்

| | | |
|---|---|---|
| பிறப்பு | - | 26.08.1927 |
| இடம் | - | யாழ்ப்பாணம் - வலிமேற்கிலுள்ள பண்ணாகம். |
| தந்தை | - | சின்னட்டியார் அப்பாப்பிள்ளை (1879 - 1952)<br>புகையிரத நிலைய அதிபர் - மலேசியா<br>1925 - 1940 வரை சங்கானை கிராம சபை உறுப்பினர்.<br>பண்ணாகம் மெய்கண்டான் பரிபாலன சபையில் சமூகசேவை. |
| தாய் | - | வள்ளியம்மை அப்பாப்பிள்ளை |
| ஆரம்பக்கல்வி | - | பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில், 1931முதல் 1936வரை. |
| இடைநிலைக்கல்வி | - | சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, 1936முதல் 1946வரை.<br>அதிபர் திரு.P.G. தம்பியப்பா.<br>முதன் முதல் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்ற மாணவர். |
| பல்கலைக்கழகம் | - | 1946முதல் 1948வரை பேராதனையில் சுவாமி விபுலானந்தரிடம் தமிழ் பயின்றார். தமிழ்ச் சங்கத்தைத் ஸ்தாபித்தார். முதல் வகுப்பில் தேர்ச்சிபெற்று B.A பட்டம் பெற்றார். |
| சட்டக்கல்லூரி | - | 1948முதல் 1951வரை பயின்று நியாயவாதியாகத் திறமைச் சித்தியடைந்தார்.<br>1950 சட்டக்கல்லூரித் தமிழ்ச் சங்கத்தைத் ஸ்தாபித்து அதன் முதற் தலைவரானார். |

சுவாமி விபுலானந்த அடிகள், கலாநிதி N.M.பெரேரா, கலாநிதி கொல்வின் R.D. சில்வா, தந்தை செல்வா ஆகியோரிடம் முறையே தமிழ், பொருளாதாரம், சட்டம், அரசியல் என்பவற்றை ஐயம் திரிபறக் கற்றதுடன் அவர்களினால் பாராட்டப்பட்ட பெருமையையும் பெற்றார்.

## அரசியல் பிரவேசம்

சுதந்திரன் பத்திரிகைக்கு 1948ல் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஒரு கட்டுரை எழுதினார். இதைத் தொடர்ந்து தந்தை செல்வா கடிதம் எழுதி இவரை அழைத்தார். சுதந்திரம் அடைந்ததன் பின்னர் கொண்டுவரப்பட்ட இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம், இந்திய பாகிஸ்தானியர் பிரஜாவுரிமைச் சட்டம் என்பவற்றை எதிர்த்த தந்தை செல்வாவுடன் இணைந்து அரசியல் இயக்கம் ஒன்றை ஆரம்பிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் 13.02.1949ல் நடைபெற்ற கூட்டத்தில் சட்ட மாணவனாக இளைஞர் சார்பில் உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1949-09-03 - சங்கிலியன் தோப்பில் நந்திக்கொடியை ஏற்றிவைத்தபின் அங்கிருந்து நந்திக்கொடியை ஏந்தியவாறு நூற்றுக்கணக்கான தொண்டர்கள் அணிவகுத்து நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடிக்குச் செல்லல். கூட்டமேடை மாற்றுக்கட்சினரால் ஆக்கிரமிக்கப்பட்டு, பொலிசாரின் தலையீட்டினால் கூட்டம் தடை செய்யப்பட, அடுத்தநாள் நவாலியில் பண்டிதர் இளமுருகனார் தலைமையில் கூட்டம்.

1949-12-18 - காலை 9.30 மணியளவில் மருதானை அரசாங்க இலிகிதர் சேவைக்கட்டடத்தில் தமிழரசுக்கட்சி ஸ்தாபிதம். தலைவராக தந்தை செல்வா ஏகமனதாகத் தெரிவு. அமிர் மத்திய செயற்குழு உறுப்பினராகத் தெரிவு.

1951-04-13 - முதல் 1951-04-15 வரை திருமலையில் தமிழரசுக் கட்சியின் முதலாவது மாநாடு. தலைவர் தந்தை செல்வா.

1952 - பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டையில் தோல்வி.

1953 - தைப்பொங்கல் தினத்தன்று தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி உதயம். கொக்குவில் ந. அருணாசலம் முன்னணி அமைக்க பெரும் முயற்சி செய்தார். அமிர் முதற் தலைவராக தெரிவு.

1953 - யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரண்டாவது தமிழரசுக்கட்சி மாநாட்டில் நல்லூர் இளைஞர்கள் சங்கிலியனின் வரலாற்றை நாடகமாக மேடையேற்றினர்.

1953-08-12 - ஐ.தே.கட்சி அரிசியின் விலையை அதிகரித்ததை எதிர்த்து நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற ஹர்த்தாலில் தமிழரசுக் கட்சி இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் வெற்றிகரமாக நடத்துவதில் பெரும் பங்கெடுத்தார்.

1954 - ஜூலையில் திருமணப்பதிவு அன்றே மாலையில் கரவெட்டியில் நடைபெற்ற பொதுமேடைக் கருத்தரங்கில் திரு.வி.பொன்னம்பலம் அவர்களுடன் கருத்துப்போர்.

1954 - நடுப்பகுதியில் இலங்கை வந்த எலிசபெத் மகாராணிக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தமிழைப் புறக்கணித்த காரணத்திற்காக யாழ்ப்பாணம் வருகைதந்த பிரதமர் சேர். ஜோன். கொத்தலாவலைக்கு தமிழர்களின் எதிர்ப்பைத் தெரிவிக்க கறுப்புக் கொடிகாட்டப்பட்டது. பொலிசாரின் குண்டாந்தடியடிப் பிரயோகத்தில் அடியுண்டார்.

1956-02-18 - ஐ.தே.கட்சியின் களனி மாநாடு சிங்களம் மட்டும் ஆட்சி மொழி என தீர்மானம்.

1956-02-20 - வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால்

1956 - ஏப்ரல் தேர்தலில் வட்டுக்கோட்டையில் பெருவெற்றி.

1956-06-05 - சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்த்து காலிமுகத்திடலில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின்போது சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டு தலையில் காயத்துடன் அன்று மாலை பாராளுமன்றில் பேச்சு.

1956-06-15 - அதிகாலை சிங்களம் மட்டும் சட்டம் பாராளுமன்றில் நிறைவேற்றம். எதிர்த்து வாக்களித்தல் - தலைமகன் காண்டீபன் பிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956-07-05 - முதல் 1956-07-16 வரை திருமலை யாத்திரை. பொன்னாலையிலிருந்து திருமலைவரை நடந்த ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினர்.

1956-08-17 - முதல் 1956-08-19 வரை திருமலையில் தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநாடு.
திரு. எம்.பி.டி. சொய்சாவுக்கு யாழ். புகையிரத நிலையத்தில் கறுப்புக் கொடி. பொலிசாரால் தாக்கப்பட்டார்.

1957-02-04 - சுதந்திர தினத்தன்று திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்தில் கறுப்புக்கொடி கட்ட ஏறிய தியாகி நடராசன் சுட்டுக்கொலை.

1957-07-26 - பண்டா செல்வா ஒப்பந்தம்.

1957 - ஆகஸ்ட் இங்கிலாந்தில் "Inter Parliament Confrence" இல் உரை நிகழ்த்தினார். லண்டன் மாநகராட்சி விருந்துபசாரத்தில் தமிழ்ப் பாரம்பரிய உடையணிந்து தமிழ்க் கலாசாரத்தை வெளிப்படுத்தினார்.

1958-04-05 - சிங்கள எதிர்ப்பில் மலைநாட்டில் பொகவந்தலாவையில் ஐயாவும், பிரான்சிசும் பொலிஸ் சுட்டுப் பலியானதற்கு வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால்.

1958-04-08 - ஒப்பந்தம் இரத்தானதென பிரதமர் அறிவிப்பு.

1958-04-10 - சிங்கள ஸ்ரீ எதிர்ப்புப் போராட்டத்தில் கைதாகி 14 நாட்கள் சிறைத்தண்டனை - யாழ். கோட்டை சிறையில் அடைப்பு.

1958-05-23 - முதல் 1958-05-25 வரை வவுனியாவில் 6ஆவது மகாநாடு - திரு. ராஜவரோதயம் தலைவர். மகாநாடு முடிவடைய கலவரம்.

1958 - மே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு தோணியில் செல்லுதல். மட்டக்களப்பில் கைதாகி கொழும்பு கொண்டுசெல்லப்பட்டு 4 மாதம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

1958-06-05 - கட்சித் தடை, சுதந்திரன் பத்திரிகைக்கு தடை, மத்திய செயற்குழு உறுப்பினர்கள் கைது.

1958 - நவம்பர் தீண்டாமை ஒழிப்பு மாதம் ஆலய, தேனீர் கடை பிரவேசம்.

1959-06-02 - இரண்டாவது மகன் பகீரதன் பிறப்பு

1960 - மார்ச் பொதுத் தேர்தலில் வெற்றி.

1960 - ஜுலை பொதுத் தேர்தலில் வெற்றி

1960 - இந்தி பிரதமர் நேரு விஜயம்.

1961-02-20 - காலை 7.30 மணிக்கு தனிச் சிங்களச் சட்ட அமுலை எதிர்த்து யாழ் கச்சேரி முன்பாக சத்தியாக்கிரகம்.

1961-02-27 - மட்டக்களப்பிற்கும் பின்னர் திருமலை, மன்னார், வவுனியா பகுதிகளிலும் போராட்டம் விஸ்தரிப்பு. 3 மாதகாலம் அரச பணிகள் ஸ்தம்பிதம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1963-07-05 - தமிழரசு தபாற் சேவை நடத்தப்பட்டதில் முக்கிய பங்களிப்பு.

1963-07-17 - நள்ளிரவு அவசரகாலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் அமுல். மனைவி உடனும், ஏனைய தமிழ்த் தலைவர்களுடனும் (மொத்தம் 74 பேர்) கைதாகி விமான மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டு பனாகொடை இராணுவ முகாமில் 6மாதம் தடுத்து வைக்கப்பட்டு அக்டோபரில் விடுதலை.

1963 - ரி.பி.இலங்கரத்னாவுக்கு யாழ்ப்பாணத்தில் கறுப்புக்கொடி பொலிசாரால் தாக்கப்பட்டார்.

1965-03-24 - டட்லி - செல்வா ஒப்பந்தம்

1965 - பொதுத் தேர்தலில் பெருவெற்றி.

1966 - 2ம் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு மலேசியாவில் பங்குபற்றல்.

1969 - உடுவில் மாநாட்டில் செயலாளராக பதவியேற்பு

1970 - தேர்தலில் தோல்வி

1971-02-07 - தமிழர் இயக்கங்கள் வல்வெட்டித்துறையில் ஒன்றுபட்டபோது முன்னின்று செயற்பட்டார்.

1972 - பெப்பிரவரியில் தந்தை செல்வா, கோவை மகேசன் ஆகியோருடன் தம்பதிகள் இந்தியா பயணம்

1972-05-14 - திருமலையில் தமிழர் கூட்டணி உதயமாக முன்னின்று உழைத்தார்.

1972-05-22 - புதிய அரசியலமைப்புச் சட்டத்தை யாழ் நாவலர் மண்டபத்தில் தீக்கிரையாக்கினார்.

1973-09-07 - மல்லாகம் மாநாட்டில் தமிழரசுக் கட்சியின் ஆறாவது தலைவராக ஏகமனதாகத் தெரிவு.

1974 - தை மாதம் 4வது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்ற போது அதன் வெற்றிக்கு தீவிரமாக உழைத்தார்.

1974-12-18 - தமிழரசுக் கட்சியின் வெள்ளி விழா - வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தந்தை செல்வா அவர்களுக்கு மூதறிஞர் பட்டம் வழங்கும் வைபவத்திற்கு தலைமை தாங்கினார்.

1975 - சட்ட மறுப்பில் சிறைசென்ற கிளிநொச்சித் தொகுதித் தொண்டர்கள் விடுதலையாகி வரவேற்கச் சென்றபோது யாழ் கோட்டை பொலிஸ் நிலையமுன்றலில் பொலிசாரால் தாக்கப்பட்டார்.

1976-05-14 - வட்டுக்கோட்டையில் தமிழர் விடுதலைக் கூட்டணி மாநாடும் தனது நீண்ட காலக் கனவான தமிழீழ இலட்சியத்தை முன்னெடுத்து மாநாட்டுத் தீர்மானமாக நிறைவேற்றப் பாடுபட்டார். வெற்றியும் கண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதல் இணைச் செயலாளர் நாயகங்களாக திரு. மு. சிவசிதம்பரம் அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து பணியாற்றினர். தந்தை செல்வாவின் மறைவின் பின்னர் செயலாளர் நாயகமாக இறக்கும்வரை தன்னை அர்ப்பணித்தார்.

1976-05-22 - வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை துண்டுப்பிரசுரமாக விநியோகித் தமைக்காக கைதாகி Trial at Bar என்ற சிறப்பு நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டார். தடுப்புக் காவலில் 2 மாதங்கள் வைக்கப்பட்டார். Trial at Bar அதிகாரமற்றது என்ற தீர்ப்பைத் தொடர்ந்து விடுதலையானார்.

1977 - பொதுத் தேர்தலில் காங்கேசந்துறையில் பெருவெற்றியடைந்தார். பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

1977-04-26 - அரசியல் குரு தந்தை செல்வா மரணம்.

1977 - ஆகஸ்ட் மாதம் யாழ் பஸ்நிலையத்தில் பொலிசாரினால் தாக்கப்பட்டார்.

1978 - ஆவரங்கால் கூட்டணி மகாநாடு.

1978 - இந்தியா விஜயம். தமிழீழப் போராட்டத்திற்கு தமிழ் நாட்டிலும், டெல்லியிலும் பிரச்சாரம். இந்திய அரசை ஈழத் தமிழருக்குச் சார்பாக மாற்றல்.

1978 - இங்கிலாந்தில் ஈழத்தமிழர் பிரச்சனை பற்றி பிரச்சாரம். தமிழ் Co-ordinating Committee (தமிழர் ஒருங்கிணைப்புக் குழு) நிறுவுதல்.

1978-08-03 - பாராளுமன்றத்தில் புதிய அரசியல் அமைப்பு சட்ட விவாதத்தில் 4-1/2 மணி நேரம் தமிழிலும் ஆங்கிலத்திலும் நீண்ட உரை. இதை முறியடிக்க பின்னர் பிரதமர் பிரேமதாச 5 மணி நேரம் உரையாற்றினார்

1979 - உலகமெல்லாம் சென்று ஈழத்தமிழர் போராட்டம்பற்றிப் பிரச்சாரம்.

1980 - எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் மொறட்டுவை பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டத்திற்கு சென்று அவர்களின் கோரிக்கைக்கு இணங்க கூரை மீது ஏறி அவர்களின் பிரச்சனையை கேட்டு அறிந்து சமரசம் செய்த சம்பவம் முக்கியமான நிகழ்வு ஆகும்.

1981 - மாவட்ட சபைத் தேர்தல் - பொலிசாரினால் யாழ். பொது நூல் நிலையம், கூட்டணி அலுவலகம், ஈழநாடு அலுவலகம், எரிப்பு. கைதாகி 24 மணி நேரத்தில் விடுதலை.

1981-07-23 - பாரளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் - எதிர்க்கட்சிகள்
1981-04-24 - அனைத்தும் வெளிநடப்புச் செய்த நிலையில் 121 வாக்குகளால் தீர்மானம் நிறைவேற்றம். அமைச்சர்கள் தொண்டமான், ஷெல்டன் ரணராஜா ஆகியோர் நடுநிலைமை. எவரும் எதிர்த்து வாக்களிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 - Common Wealth Confrence Nigeria பங்கேற்பு அமெரிக்க மசற்சுசெற் தமிழீழ தீர்மான பத்திரத்தைப் பெறல்.

1983-01-05 - மதுரையில் நடைபெற்ற 5ஆவது உலகத் தமிழ்மாநாட்டின் பிரதான பேச்சாளர்.

1983-07-23 - முதல் 1983-07-24 வரை மன்னார் மாநாடு - இனக் கலவரம்

1983-08-13 - ஜூலை கலவரங்களைத் தொடர்ந்து மாறுவேடத்தில் கொழும்புவந்து தந்தையின் பெயரில் சென்னைக்குப் பயணம். தமிழ்நாட்டுத் தலைவர்களை இரவிரவாக சந்தித்தல் புது டில்லிக்கு சென்று அன்னை இந்திராவைச் சந்தித்துப் பேச்சு

1983-08-15 - சுதந்திர தினவிழாவில் அரச விருந்தினராகப் பங்கேற்பு

1983-08-16 - சர்வதேச பத்திரிகையாளர் மாநாடு - கலாநிதி நீலன் தலைமை

1983 - அக்டோபரில் இங்கிலாந்துக்கும் ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் சென்று ஈழத்தமிழர் பிரச்சனைபற்றியும், இந்தியாவின் பங்களிப்பு பற்றியும் பிரச்சாரம்.

1983-10-22 - பிரிவினைக்கெதிரான உறுதிப்பிரமாணம் செய்ய மறுத்து பாராளுமன்றப் பதவியையும் எதிர்க்கட்சித்தலைவர் பதவியையும் தூக்கிவீசுதல்.

1984 - கொழும்பு வட்டமேசை மாநாடு G. பார்த்தசாரதியின் (Special envoy) அனுசரணையுடன்.

1985 - திம்புப் பேச்சுவார்த்தையில் பங்கேற்று தமிழர் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை முன்வைத்தல்.

1987-02-25 - சென்னை மரீனா கடற்கரையில் உண்ணாவிரதம்.

1987-07-29 - இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்து

1988 - இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வருதல்

1989 - பாராளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடடுத் தோல்வி. தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராதல்.

1989-07-13 - மாலை 6.45 மணியளவில் கொழும்பு 7, 410/27, பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள வாசஸ்தலத்தில் சமரசப் பேச்சுவார்த்தைக்கு என வந்தவர்களால் படுகொலை.

**தொகுப்பு - தங்க. முகுந்தன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் போட்டியிட்ட தேர்தல்களின் விபரம்

| ஆண்டு | தொகுதி | வேட்பாளர்கள் | கட்சி | வாக்குகள் |
|---|---|---|---|---|
| 1952 | வட்டுக்கோட்டை | V. வீரசிங்கம் | சுயேட்சை | 5687 |
| | | K. கனகரட்ணம் | தமிழ் காங்கிரஸ் | 5261 |
| | | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 4500 |
| 1956 | வட்டுக்கோட்டை | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 14937 |
| | | A. வைததிலிங்கம | தமிழ் காங்கிரஸ் | 10850 |
| 1960 மார்ச் | வட்டுக்கோட்டை | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 11524 |
| | | S. சுந்தரசிவம் | ல.ச.ச.க. | 3614 |
| 1960 ஜுலை | வட்டுக்கோட்டை | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 13454 |
| | | A. வைததிலிங்கம் | கம்யூனிஸ்ட் | 5206 |
| 1965 | வட்டுக்கோட்டை | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 15498 |
| | | K. சுப்பரமணியம் | தமிழ் காங்கிரஸ் | 4359 |
| 1970 | வட்டுக்கோட்டை | A. தியாகராசா | தமிழ் காங்கிரஸ் | 14359 |
| | | **அ. அமிர்தலிங்கம்** | தமிழரசுக் கட்சி | 13634 |
| 1977 | காங்கேசன்துறை | **அ. அமிர்தலிங்கம்** | த.வி.கூ | 31155 |
| | | S. சிறீதரன் | சுயேட்சை | 5322 |

## 1989 பொதுத் தேர்தல் – மட்டக்களப்பு மாவட்டம்

### கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகள்

| | |
|---|---|
| த.வி.கூ | 55131 |
| ஐ.தே.க | 11317 |
| ஸ்ரீ.சு.க | 4130 |
| ஸ்ரீ.மு.க | 36867 |
| சுயேட்சை-1 | 46419 |

### விருப்பு வாக்குகள் விபரம்

| | |
|---|---|
| கோ. கருணாகரன் | 25651 |
| பிறின்ஸ் காசிநாதர | 21959 |
| சாம். தம்பிமுத்து | 19431 |
| **அ. அமிர்தலிங்கம்** | 17926 |
| ஜோசப் பரராஜசிங்கம் | 12470 |
| சீவரட்ணம் கந்தையா | 10683 |
| இ. ஜெகராஜசிங்கம் | 9473 |
| M.M. அபுபக்கர் | 1009 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message

On the occasion of the commemoration of the 76th birth anniversary of the late Mr. Appapillai Amirthalingam may I join in paying an Honourable tribute to the memory of an Honourable fellow member of parliament whom I had the pleasure and honour of knowing for over forty years. In July 1960 the Sri Lanka Parliament had as its representatives from the northen province distinguished and honourable members of the caliber of Honourable Chelvanayagam. Honourable Alfred Thuriappa, Honourable Amirthalingam, Honourable M. Sivasithambaram, Honourable V. Navarathnam, Honourable Dr. Naganathan, Honourable Dharmalingam, Honourable Thurairatnam etc. and again in 1977 younger members of caliber of Honourable V. Yogesweran, Honourable Dr. Neelan Thiruchelvam, Honourable V. Anandasangaree, Honourable T. Sivasithambaram, Honourable Soosaithasan, Honourable R. Sambanthan. I can calm to have had a close relationship with all of them and have had the highest respect and affection for them. Sadly several of these Honourable gentlemen have been killed by the very people they represented. I frankly do not see the rationally for those killing. Can you take the life of another expect on the order of a properly constituted court of law? Sadly, the life of the Honourable Amirthalingam was taken away in brutal manner on the 13th July 1989. The whole country was shocked ans saddened by this killing. My dear friend Yogesweran, the Honourable member for Jaffna, too lost his life while my other friend M. Sivasithambaram narrowly escape death.

The 23rd and 24th July 1981 were sad days for me when I witnessed the debate in parliament as the no confidence motion against Honourable Amirthlingam who was the leader of the opposition. I was there when two members of parliament suggested ways of punishing of Mr. Amirthalingam for some perceived wrong he had committed. I was flabbergasted and could not hold my tears watching the spectacles. In contrast, in the same year when motion to expel the very member who moved a motion against Honourable Amirthalingam was taken up for debate in the house on the 23rd December 1981. Honourable Amirthalingam made a moving speech in parliament pleading with the government not to take such undemocratic measures against a fellow member elected by the people. Honourable Amirthalingam fought honestly and sincerely for the cause of this people and the leader of the oppersition fearlessly against corruption and for the protection of the democratic rights of all the people of Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

May the memory of Appapillai Amirthalingam be kept alive in the heart and minds of all Sri Lankans.

Shelton Ranarajah
Ex. MP & Deputy Minister of Justice

## அமிர்தலிங்கம் நினைவுப்பணிக் கழகம்

அமிர்தலிங்கம் நினைவுப் பணிக்கழகம் சட்டத்தரணியும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் சட்டத்துறைச் செயலாளரும், யாழ். மாநகர சபையின் முதல்வருமான அமரர் பொன். சிவபாலன் அவர்களால் 1990இல் ஸ்தாபிக்கப்பட்டது. அமரர். அமிர்தலிங்கம் அவர்கள் மீதுகொண்ட விசுவாசத்தின் காரணமாக அவரது மறைவுக்குப் பின்னர் அவரையும் அவரது தன்னலமற்ற பணிகளையும் நினைவுகூரவேண்டும் என்ற ஒரே நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம் அந்த வருடமே கொழும்பு சட்டக் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தினரிடம் தலைவர்கள் தந்தை செல்வா, திரு. மு. திருச்செல்வம், திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோரின் நினைவாக வருடாவருடம் நினைவுப் பரிசுகளை வழங்க நடவடிக்கை எடுத்தது. திரு. பொன். சிவபாலன் அவர்கள் 11.09.1998ல் மாநகர சபைக் குண்டுவெடிப்பில் அகால மரணமடைந்ததன் பின்னர் அமிர்தலிங்கம் நினைவுப்பணிக் கழகத்தின் செயற்பாடுகளும் தடைப்பட்டிருந்தது. தற்பொழுது மீள் அமைக்கப்பட்ட கழகம் "நன்றி பேணி நாம் உயர்வோம்" என்ற கழகத்தின் தாரக மந்திரத்தை மீள நினைவுபடுத்தி தனது பணிகளை மேற்கொள்ளும் என இன்றைய நாளில் உறுதிகூறி முதலாவதாக கொழும்பில் இன்று (24.08.2003) இந்த வெளியீட்டை வெளியிடுவதில் மனநிறைவடைகின்றோம்.

-கழகத்தினர்

Amirthalingam Memorial Organization
30/1B, Alwis Place, Colombo-03.
Tel : 2347721 Fax : 2384904



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

May the memory of Appapillai Amirthalingam be kept alive in the hearts and minds of all Sri Lankans.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org